மதிப்புக்குரிய சங்கை, போதகர்கள் மற்றும் ஊழியர்கள்

**கரு: ஏஜி ஜெப ஆணையம் தேசிய ஜெப பேரணிகள் ஆகஸ்ட் 31, 2018**

9 மே மலேசியாவுக்கு முக்கியத்துவம்மிக்க ஒரு நாளாக அமைந்தது. எதிர்கட்சி கூட்டனி, பாக்காத்தான் அராப்பான் 14வது பொது தேர்தலில் வென்று தேசிய முன்னனியின் 60 ஆண்டின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். இந்த அற்புதத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அநேக ஆண்டுகளாக சர்வ தேசத்தாரும், நம் தேசத்தாரும் நம் தேசத்தில் விதைத்து இருக்கிறார்கள். எங்களுக்காக ஜெபித்து மற்றும் ஜெபத்தில் பங்களித்தவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மலேசியாவிலுள்ள பல ஸ்தாபனத்தோடும் மற்றும் ஜெப பிணையத்தோடும் ஒற்றுமையாக இருந்தோம்.

சபையானது தொடர்ச்சியாக விடாமுயற்சியோடு ஜெபித்து மற்றும் நம் தேசத்திற்காக தேவனுடைய தயவை தேட வேண்டும். வெற்றியை மட்டுமே கொண்டாடதப்படிக்கு நாம் ஜெப உத்வேகத்தைக் காக்க வேண்டும். தேசிய மறுரூபத்தைக் கொண்டு வர ஜெபமே உந்துவிசையாக இருக்கிறது. இன்னும் அநேக காரியங்கள் செயல்தவிர்த்தப்பட வேண்டும் மற்றும் செயல்படுத்த வேண்டும். நாம் நம் தேசத்தை நேசிக்கிறோம் மற்றும் நம் தேசத்தின் நன்நலத்திற்காக நாம் தேவனின் காவற்காரராக இருந்து நம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறோம். மக்களின் சார்பாக நம் தேவனின் முன்பாக நின்று மக்களுக்கு நியாயத்தீர்ப்பின் எச்சரிக்கை கொடுத்து மற்றும் நம்பிகை மற்றும் உற்சாகத்தின் செய்தியை கொடுக்க வேண்டும்.

ஏஜி ஜெப ஆணையம் **ஆகஸ்ட் 31**, வெள்ளிக்கிழமையை **தேசிய ஜெப நாளாக** நியமித்துள்ளது. நம்முடைய கருப்பொருள் **"அவருடைய மகிமை ஆளுகிறது… அவர் எல்லாவற்றையும் புதிதாக்குகிறார்"**. ஆபகூக் 2:14 "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்". தேவன் மலேசியாவை புதிய காலத்திற்குள்ளாக கொண்டு வந்துள்ளார். அதின் எதிர்காலத்திற்கும், நம் தலைவர்களுக்கும், நம் மக்களுக்கும் மற்றும் தேவனுடைய மகிமை நம் தேசத்தின் மேல் இருக்கவும்.

இந்த நாளிலே உங்கள் சபையிலே மலேசியா நாளின் ஜெப ஆணையத்தை நீங்கள் தலைமை தாங்கும்படியாக நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஒருவேளை ஆகஸ்ட் 31 வசதியில்லாமல் இருந்தால், இத்தேதிக்கு நெருங்கிய ஒரு தேதியை நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஜெபத்தில் நாம் ஒன்றுகூடுவோம்.

தேசிய ஜெப பேரணியை ஏற்பாடு செய்யக்கூடுமென்றால் நீங்கள், உங்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களை அல்லது பிரிவு அல்லது மொழி ஒருங்கிணைப்பாளர்களை விரைவில் தொடபுக்கொள்ளுங்கள். உங்கள் நிகழ்ச்சியை நாங்கள் விளம்பரப்படுத்த ஜூலை 10-குள்ளாக எங்கோளோடு உறுதிப்படுத்துங்கள். பரிந்துரைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலையும் மற்றும் ஜெப குறிப்புகளும் உங்களுக்கு கொடுக்கப்படும். மேல் விவரத்திற்கு இந்த அகப்பக்கத்திற்கு அணுகவும் : http://agpc.org.my/his-glory-reigns/

| | | |
|---|---|---|
| வடக்கு மாவட்டம்: | சங்கை மார்கஸ் தான் | 04 658 4404 |
| மத்திய: | சங்கை எபினேசர் | 012 674 5081 |
| கே.எல் - கிழக்கு | சங்கை ஸ்டீபன் காங் | 012 398 3835 |
| தெற்கு மாவட்டம் | சங்கை ரூத் தான் | 012 727 9280 |
| கிழக்கு மலேசியா மாவட்டம் | சங்கை ஜோன் லிம் | 016 273 0400 |
| சீன: | சங்கை ஜானி ஹாய் | 012 933 2790 |
| மலாய்: | சங்கை ஏரேமியா கான் | 016 331 1054 |
| தமிழ்: | சங்கை ஆரோக்கியநாதன் | 016 3191175 |

மத்திய மற்றும் கே. எல் மாவட்டத்தில் உள்ளவர்கள் ஆகஸ்ட் 31-ம் தேதி காலை 9.30 – மதிய 12.30 மெட்ரோ தபெர்னிக்கலில் நடைபெறவுள்ள மலேசியா நாளின் ஜெப பேரணில் கலந்து கொள்ளும்படியாக நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அசெம்பெளி ஒப் கெட்-க்கு நீங்கள் காணிக்கை எடுக்கும்படியாக கேட்டுக்கொள்கிறோம். நம்முடைய நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்த நிதி தேவை அதாவது ஜெப பீடங்கள், ஜெப வழிகாட்டிகள், ஜெப பள்ளிகள், ஜெப வாகனம் ஓட்டுகை ஆகியவை. ஜெப ஊழியத்தில் பங்கேற்பாளர்கள் விதைக்க சவால் ஊட்டுங்கள் முன்கூட்டியே கொடுத்தவர்களை நாங்கள் பாராட்டுகிறோம்.

உங்களிடமிருந்து நாங்கள் கேட்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஒன்றாக சேவை,
சங்கை லீசா சின்
ஏஜிபிசி தேசிய ஜெப பேரணி ஒருங்கிணைப்பாளர்
சிசி. சங்கை தியோ க்வீ கெங்
ஏஜிபிசி தலைவர்